திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, மத்திய சர்க்காருக்கு இந்தத் திட்டம் அனுப்பப்பட்டு, இன்னும் ஒப்புதல் வரவில்லை என்று கூறினுர்கள். ஆகவே, மாநில மட்டத்திலாவது இதற்காகத் தனி வாரியம் அமைத்து எல்.ஐ.சி. அல்லது மற்ற பேங்குகள் மூலமாகக் கடன் பெற்றுக் கடன் முறையிலே அளித்து வீடு கட்ட வீடில்லாத அத்தனை அரிசன மக்களுக்கும் கடன் உதவி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : திருப்பி கடனைக் கொடுப்பவர்களுக்குத்தான் எல்.ஐ.சி.யின் மூலம் கடன் பெற்று, அந்த விதத்தில் ஒரு கழகத்தைத் தமிழ் நாடு வீட்டு வாரியக் கழகம் என்று நிறுவியிருக்கிறேம் என்று இரண்டு தினங்களுக்கு முன்பு நடந்த அரிசன நல மானியக் கோரிக்கை விவாதத்தின்போது விவரமாகக் கூறியிருக்கிறேன். அது கடனைத் திருப்பித் தருபவர்களுக்கான திட்டம். ஆனுல், கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாமல், மிகவும் ஏழையாக இருப்பவர்களுக்காக 940 ரூபாயாக இருந்த இந்தத் திட்டத்தை மாற்றி, 1,500 ரூபாயாக ஆக்கி வீடுகள் கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தை இந்த ஆண்டிலே உருவாக்கியிருக்கிறேம். ஆறு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறேம்.

திரு. கோ. செபமாலை : தலைவரவர்களே, இந்த 1,500 ரூபாய் கொடுக்கும் மானியத்திற்கு அரிசனங்கள் முதலிலே 250 ரூபாய் கட்டினுல் தான் கிடைக்கும் என்று இருக்கிறதே, அப்படியில்லாமல் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 250 ரூபாய் கட்டினுல் தான் கொடுக்க வேண்டும் என்று இல்லை. 250 ரூபாய்க்கு அவர்கள் பணமாகவோ, அல்லது உடல் உழைப்பாகவோ கொடுக்க வேண்டுமென்ற திட்டமிருக்கிறது. சிலர் 250 ரூபாயைக் கூட ஐந்து ரூபாய் தவணை வீதத்திலும் கொடுக்கிருர்கள். சிலர் உடலுழைப்புத் தருகிருர்கள். சிலர் சாமான்கள் வாங்கிக் கொடுக்கிருர்கள். எனவே, கட்டாயமாக 250 ரூபாய் கொடுத்தால்தான் திட்டம் ஏற்றுக்கொள்ளப்படும் என்ற நிலைமை இல்லை.

இராணிப்பேட்டைக்கு அரிசன தோல் பதனிடுவோர் தொழில் கூட்டுறவுச் சங்கம்.

***710 வினு.—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

இராணிப்பேட்டையில் அரிசன தோல் பதனிடுவோர் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இராணிப்பேட்டை வட்டாரத்திலே அரிசன மக்கள்தான் அதிகமாக இந்தத் தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டிருக்கிருர்கள். அவர்கள் ஏழைகளாக இருப்பதால்

பெரிய தொழிற்சாலைகளை நடத்த முடியவில்லை. ஆகவே, தொழில் அமைச்சரின் உதவியைப் பெற்று தொழில் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்க நம்முடைய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதுவரையில் இதுபோன்ற தோல் பதனிடும் கூட்டுறவுச் சங்கங்கள் 1,859 உறுப்பினர்களைக் கொண்டு, 53 சங்கங்கள் நடந்துகொண்டுதான் வருகின்றன. தமிழகம் பூராவும் இருக்கின்றன. வடார்க்காடு மாவட்டத்திலேயும் அந்தச் சங்கம் இருக்கிறது. எனவே, இராணிப்பேட்டையிலே தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether there is any proposal to mechanise tanneries because there is nasty smell coming out of them and this is felt by the persons going on the road near the tanneries ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அது பற்றித் தொழில் அமைச்சரைக் கேட்கலாம். ஆனால், மெகனைஸ் பண்ணினால், பலருக்கு வேலை இருக்காது என்று எதிர்க் கட்சியிலிருப்பவர்கள் கூக்குரல் இடலாம். இது மாண்புமிகு தொழில் அமைச்சரைக் கேட்க வேண்டிய கேள்வியாகும்.

செய்யாற்றிலிருந்து நீர்ப்பாசனக் கால்வாய்

***711 வினா.—திரு. பூ. எட்டியப்பன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாற்றில், விண்ணமங்கலம் முதல் பெரணமல்லூர், வட தின்னலூர் வரை விவசாயத்திற்கு நீர்ப்பாசன கால்வாய் ஒன்று வெட்ட செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பூ. எட்டியப்பன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் இரண்டாண்டுகளுக்கு முன்பு 42.5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு, தண்டரை அணை முடிந்த பிறகு எடுத்துக்கொள்ளலாம் என்று நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. தற்பொழுது இந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டால் மூன்று போகம் விளையும் வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, செய்யாற்றில் நீர் பற்றாக்குறை காரணமாகவும், மேலும் ஆற்றின்கீழ் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட எல்லா நிலங்களும் முற்றிலும் பயிரிடப்